# TNPSC GROUP I / II - PRELIMINARY - 2022
# INDIAN POLITY

## அரசியலமைப்பின் முகவுரை

- அமெரிக்க அரசியலமைப்பே முதன்முறையாக முகவுரையுடன் வரைவு செய்தது. இந்தியா உட்பட பல நாடுகளும் இம்முறையைப் பின்பற்றத் தொடங்கின.
- முகவுரை (Preamble) இந்திய அரசியலமைப்பின் முன்னுரையைக் குறிக்கிறது.
- முகவுரையே அரசியலமைப்பின் சாராம்சத்தை கொண்டுள்ளது. புகழ்பெற்ற சட்ட வல்லுநர் மற்றும் அரசியலமைப்பு நிபுணராகிய N.A. பல்கிவாலா, முகவரையை 'அரசியலமைப்பின் அடையான அட்டை' என்று குறிப்பிடுகிறார்.
- முகவுரையானது ஜவஹர்லால் நேரு கொண்டு வந்த 'நோக்க தீர்மானத்தை' (Objective Resolution) அடிப்படையாக கொண்டே தயாரிக்கப்பட்டது.
- 1976, 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தப்படி மூன்று வார்த்தைகள் - சமத்துவம், மதச்சார்பின்மை, ஒற்றுமை போன்றவை முகவுரையில் சேர்க்கப்பட்டது.

| |
|---|
| இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி** முறையும் அமைந்ததொரு **குடியரசாக** நிறுவவும்<br><br>அதன் குடிமக்கள் அனைவரும்<br>சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி;**<br><br>எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை**;<br>சமுதாயப்படிநிலை, வாய்ப்பு நலம் இவற்றில் **சமன்மை**; |

அனைவரிடையேயும் தனிமனித மாண்பு, நாட்டு மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **சகோதரத்துவத்தை** வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசியலமைப்புப் பேரவையில் 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று ஈங்கிதனால், இந்த அரசியலமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

**முகவுரையின் முக்கிய அம்சங்கள்**

- ♣ அரசியலமைப்பின் அதிகார மூலம்: இந்திய குடிமக்களிடமிருந்தே பெறப்படுகிறது.
- ♣ இந்திய நாட்டின் இயல்பு: இந்தியா ஒரு இறையாண்மை மிக்க, சமநலச் சமுதாய, மதசார்பற்ற, மக்களாட்சி கொண்ட குடியரசு நாடு என்று அறிவிக்கிறது.
- ♣ அரசியலமைப்பின் நோக்கங்கள்: நீதி, தன்னுரிமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகும்.
- ♣ அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்: 1949, நவம்பர் 26 ஆகும்.

**முகவுரையின் முக்கிய சொற்கள்**

1. **இறையாண்மை** (Sovereign)

- ♣ இந்திய 'இறையாண்மை' என்பது எவற்றை சார்ந்தவையும் அல்ல, மற்ற நாட்டின் சுதந்திர மாகாணமும் அல்ல. சுதந்திரம் பெற்ற இந்த நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் யாருக்கும் இல்லை.
- ♣ இறையாண்மை நாடாக இந்தியா இருப்பதால், இந்தியா எந்தவொரு வெளிநாட்டின் பகுதியையும் அதன் நலன் கருதி அப்பகுதியை பெறலாம் அல்லது இந்திய பகுதியை கொடுக்கலாம்.

2. **சமத்துவத்தன்மை** (Socialist)

- ♣ 1976ல் 42வது சட்டத்திருத்தத்தின்படி இந்த 'சமத்துவம்' என்ற வார்த்தை சேர்க்கப்படுவதற்கு முன்பே நெறிமுறைக் கோட்பாடுகளில் சமத்துவத்தின் சாராம்சம் இருந்து வந்தது.

- மேலும், 1955 ஆவடி மாநாட்டில் இந்திய காங்கிரஸ் 'சமத்துவ முறை சமூகத்தை' (Socialistic Patern of Society) அமைத்து அதன்படி நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானம் நிறைவேற்றியது.

- குறிப்பாக, இந்திய சமத்துவ முறை, மக்களாட்சி சமத்துவ முறை, இது வகுப்புவாத சமத்துவ முறை இல்லை.

- 'வகுப்புவாத சமத்துவத்தில்' (Communistic Socialism) – தேசிய மயமாக்குதலின் பெயரில் தனியார் சொத்துகள், உற்பத்திகள் பகிர்ந்தளிக்கப்படவும் அழிக்கப் படவும் வாய்ப்பு உள்ளது.

- ஆனால், மக்களாட்சி சமத்துவத்தில் 'கலப்பு பொருளாதாரம்' இருக்கும். இந்திய சமத்துவமுறை மார்க்சிசம் மற்றும் காந்தியின் தத்துவங்களை கொண்டு உருவாக்கப்பட்டது.

- 1991ல் புதிய பொருளாதார கொள்கையில் தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

- எனினும் இவை இந்தியாவில் சமத்துவமற்ற முறையை மேம்படுத்தியது.

3. **மதசார்பின்மை** (Secular)

- 1976ல், 42வது சட்டதிருத்தத்தின் படி 'மதச்சார்பின்மை' என்பது இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

- 1974ல் உச்சநீதிமன்றம் 'மதசார்பற்ற நாடு'(Secular State) என்ற வார்த்தை குறிப்பாக அரசியலமைப்பில் இடம் பெறவில்லை எனினும் கூறியதை தொடர்ந்து அரசியலமைப்பை செய்தவர்கள் சரத்து 25லிருந்து 28வரை மத சுதந்திரத்தை குறிக்கும் அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பில் சேர்த்ததன் மூலம் ஒரு மதச்சார்பற்ற நாட்டையே கட்டமைக்க விரும்பினர் என்று கூறியது.

- இந்தியாவில் அனைத்து மதமும் சமமாக கருதப்படும் என்ற நேர்மறை மதசார்பற்ற முறையை அரசியலமைப்பு நிலைநிறுத்துகிறது.

4. **மக்களாட்சி** (Democratic)

- மக்களாட்சி அரசியல் முகவுரையில் சாமானிய மக்களின் இறையாண்மையை அடிப்படையாக கொண்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- மக்களாட்சி இரண்டு வகைப்படும். 1. நேரடி மக்களாட்சி, 2. மறைமுக மக்களாட்சி

 PH:24339436, 42867555, 9840226187

1. **நேரடி மக்களாட்சி** (Direct Democratic): நேரடி மக்களாட்சி முறையில் மக்கள் தங்களுடைய அதிகாரத்தை நேரடியாக பயன்படுத்த முடியும். எ.கா. சுவிட்சர்லாந்து, நேரடி மக்களாட்சி முறையில் நான்கு சாதனங்கள் இவற்றை நடைமுறைப் படுத்துகின்றன. அவை 1.வாக்கெடுப்பு (Referendum) 2. சர்வஜன வாக்கெடுப்பு (Initiative), 3. திரும்பபெறுதல் (Recall), 4. பொது வாக்கெடுப்பு (Plebiscite).

2. **மறைமுக மக்களாட்சி** (Indirect Demoractic): மறைமுக மக்களாட்சி முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் உச்சகட்ட அதிகாரத்தைப் பெற்று அரசாங்க சட்டத்தை நிர்வகிப்பார். இது பிரதிநிதித்துவ மக்களாட்சி என்றும் அழைக்கப்படுகிறது. இது இரண்டு வகைப்படும். ஒன்று நாடாளுமன்ற முறை மற்றொன்று அதிபர் முறை. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்திற்கு கூட்டுப்பொறுப்பாகிய ஆட்சித்துறையை கொண்ட பிரதிநிதித்துவ நாடாளுமன்ற மக்களாட்சியை வழங்குகிறது.

**மக்களாட்சியின் முக்கிய அம்சம்**

- வயது வந்தோர் வாக்குரிமை
- குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல்
- சட்ட விதிகள்
- நீதித்துவ சுதந்திரம்
- எந்த ஒரு அடிப்படையிலும் பாகுபாடின்மை.
- முகவுரையில் குறிப்பிட்டுள்ள மக்களாட்சி அரசியல் மக்களாட்சியை குறிப்பதோடு மட்டுமல்லாமல் சமூக மற்றும் பொருளாதார மக்களாட்சியை குறிக்கிறது.

## 5. குடியரசு (Republic)

- மக்களாட்சி அரசியலமைப்பை இரண்டு வகைப்படுத்தலாம்
  - முடியரசு மற்றும் குடியரசு. முடியரசில், நாட்டின் தலைமை (அரசன் அல்லது அரசி) வம்சாவளி முறையில் ஆட்சிபுரிவர். எ.கா. பிரிட்டன் ஆனால் குடியரசில் நாட்டின் தலைமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்தல் மூலம் நியமிக்கப்படுவார் எ.கா. USA

- இந்திய முகவுரையில் 'குடியரசு' என்ற வார்த்தை, இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரை குறிக்கிறது. அவர் ஜனாதிபதி ஆவார்.
- ஜனாதிபதி 5 ஆண்டுக்கு ஒருமுறை மறைமுக தேர்ந்தெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- குடியரசு மூன்று அர்த்தங்களைக் கொண்டுள்ளது.
  - அரசியல் இறையாண்மை மக்களிடம் உள்ளது.
  - பிரிட்டனில் உள்ளது போன்று தனிநபர் ஒருவரிடம் (மன்னர்)

இறையாண்மை வழங்கப்படவில்லை.
- அனைத்து அரசு செயல்களும் குடிமக்களுக்கு பாகுபாடின்றி தரப்பட்டுள்ளது.

## 6. நீதி (Justice)

- முகவுரையில் நீதி மூன்று வடிவத்தில் (சமூகம் (Social), பொருளாதாரம் (Economy), அரசியல் (Political)) கொடுக்கப்பட்டுள்ளது.
- இவை அடிப்படை உரிமைகள் மற்றும் நெறியுரைகள் கொண்டு பாதுகாக்கப்படுகிறது.
- சமூக நீதியானது அனைத்து குடிமக்களுக்கும் சமமாக ஜாதி, நிறம், இனம், மதம், பாலினம் போன்றவற்றின் பெயரால் பாகுபாடில்லாமல் நடத்தப்படுவதை உறுதி செய்கிறது. பொருளாதார நீதியானது பொருளியல் ரீதியான ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமுதாயத்தை உறுதி செய்கிறது. இதன் நோக்கம் செல்வம், வருவாய் மற்றும் சொத்துகளில் நிலவும் சமமின்மையை நீக்குவது சமூக மற்றும் பொருளாதார நீதியின் இணைப்பு 'பகிர்மான நீதி' எனப்படுகிறது. அரசியல் நீதி என்பது சமமான அரசியல் உரிமை, அரசு பதவிகளை அடைய சமமான வாய்ப்பு, அரசில் சமமான குரல் ஆகியவற்றை உள்ளடக்கிறது.
- இந்த சிறப்புமிக்க நீதிக்கான கோட்பாடு 1917ல் இரஷ்ய புரட்சியிலிருந்து எடுக்கப்பட்டது.

## 7. தன்னுரிமை / சுதந்திரம் (Liberty)

- 'தன்னுரிமை' (Liberty) என்பது தனிநபரின் செயல்களை கட்டுப்படுத்துவதைத் தடுத்து, அதே சமயம் தனி மனித மேம்பாட்டுக்கு வாய்ப்புகளை தருவது ஆகும்.
- அரசியலமைப்பு முகவுரை அனைத்து இந்திய குடிமக்களுக்கும் எண்ணம், வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டில் தன்னுரிமையை 'அடிப்படை உரிமைகள்' மூலமாக பாதுகாக்கிறது. தன்னுரிமை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் எனும் கோட்பாடுகள் பிரஞ்சு புரட்சியிலிருந்து (1789-1799) பெறப்பட்டது.

## 8. சமத்துவம் (Equality)

- சமத்துவம் அல்லது சமன்மை என்பது எந்த வகுப்பினருக்கும் சிறப்பு சலுகைகள் வழங்காமல் இருப்பது மற்றும் அனைத்து தனி மனிதர்களுக்கும் ஏற்றத்தாழ்வின்றி சம வாய்ப்பு வழங்குவது ஆகும். முகப்புரையில் சமுதாயப் படிநிலை மற்றும் வாய்ப்பு நலம் ஆகியவற்றில் சமத்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

- இந்திய அரசியலமைப்பு முகவுரையில் சமத்துவம் இருவகையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- தேர்தல் பட்டியலில் எந்தவொரு நபரையும் மதம், இனம், ஜாதி, மற்றும் பாலினத்தின் அடிப்படையில் நீக்கக்கூடாது (சரத்து 325)
- மத்திய மக்களவை, மாநில சட்டமன்றத்திற்கு வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல் நடைபெற வேண்டும். (சரத்து 326)

- அரசு கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகள் (சரத்து 39) ஆண் மற்றும் பெண்களுக்கு சம உரிமை, வாழ்வாதாரம் மற்றும் பணிக்கு ஏற்ற கூலி போன்றவற்றை கூறுகிறது.
- அரசியலமைப்பில் சரத்து 15ல் எந்த ஒரு நபரும் மதம், ஜாதி, இனம் மற்றும் பிறந்த இடத்தை அடிப்படையாக பாகுப்படுத்துதல் சட்ட விரோதமானதாகும்.
- சரத்து 17ல் தீண்டாமை ஒழிப்பு மற்றும் சரத்து 18ல் பட்டம் வழங்குதலை நீக்குதல் போன்றவற்றின் மூலமாக அரசியலமைப்பு சமத்துவத்தை உறுதிச் செய்கிறது.
- இருந்தபோதிலும் பாராளுமன்றம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு சில சட்டங்களை இயற்றி அவர்கள் தேசத்தின் சமூக அமைப்பிலிருந்து புறக்கணிக்கப்படுவதை தடுக்கிறது.

## 9. சகோதரத்துவம் (Fraternity)

- இந்திய அரசியலமைப்பு ஒற்றை குடியுரிமை மூலம் சகோதரத்துவத்தை மேம்படுத்துகிறது.
- ஒருமைப்பாடு என்ற வார்த்தை 42வது சட்டத்திருத்தத்தின்படி அரசியலமைப்பு முகவுரையில் சேர்க்கப்பட்டது.
- அடிப்படை கடமைகள் சரத்து 51A வழியுறுத்துவது யாதெனில் ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை என்பது மதத்தால், மொழியால் பல்வேறு பகுதியில் வேறுபட்ட மக்களிடையே சகோதரத்துவத்தை மேம்படுத்துவதாகும்.
- முகப்புரைப்படி, சகோதரத்துவம் இரண்டை உறுதிபடுத்த வேண்டும் - தனி மனித மாண்பு மற்றும் நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும்.
- இந்திய அரசியலமைப்பு சரத்து 1ல் இந்திய ‘மாநிலங்களின் ஒன்றியம்’ (Union of States) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இவை தெளிவாக இந்திய எல்லையில் உள்ள எந்த பகுதிக்கும் ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை இல்லை என்பதை விளக்குகிறது.
- இவற்றின் முக்கிய நோக்கம், தேசிய ஒற்றுமைக்கு தடையாக உள்ள வகுப்பவாத வேறுபாடு, பகுதிப்பாகுபாடு, ஜாதிமுறை, மொழி வேறுபாடு, வாரிசுரிமை முறை போன்றவற்றை தடுத்து சகோதரத்துவத்தை மக்களிடையே நிலை நாட்டுவதே ஆகும்.

## முகவுரையின் முக்கியத்துவம் (Significance of the Preamble)

- ♣ இவற்றின் அடிப்படைத் தத்துவம் மற்றும் அடிப்படை மதிப்புகளை (அரசியல், ஒழுக்கம், தத்துவம் மற்றும் மதம்) கொண்டு அமைந்துள்ளது.
- ♣ இந்த முகவுரையானது அரசியலமைப்பு சபையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்பு தன்மையுடன் அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது.

**முகவுரையை பற்றிய முக்கிய நபர்கள் கருத்து**

- ♦ **பண்டித் தாகூர் தாஸ் பார்கவா:** முகவுரை அரசியலமைப்பின் ஆன்மா, அரசியலமைப்பின் திறவுகோல், அரசியலமைப்பின் பொற்களஞ்சியம், முகவுரையை கொண்டே அரசியலமைப்பை மதிப்பீடு செய்யலாம்.
- ♦ **K.M.முன்சி** (அரசியலமைப்பு வரைவு குழுவின் உறுப்பினர்): முகவுரை என்பது நமது இறையாண்மை, மக்களாட்சி குடியரசின் ஜாதகம்.
- ♦ **எம்.ஹிதயத்துல்லா** (முன்னால் இந்தியா தலைமை நீதிபதி)**:** நமது அரசியலமைப்பு முகவுரை ஐக்கிய அமெரிக்கா நாட்டின் சுதந்திர பிரகடனத்தை போன்று அமைந்துள்ளது. ஆனால் அதை விட சிறப்பாக இந்தியா முகவுரை அமைந்துள்ளது என்றார். இவை நமது அரசியலமைப்பின் ஆன்மா என்றார். இவை நமது அரசியல் சமூக அமைப்பை விளக்குகிறது.
- ♦ **சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்:** நமது அரசியலமைப்பின் முகவுரை எங்கள் நீண்டகால எண்ணம் மற்றும் கனவுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.
- ♦ **சர். எர்னஸ்ட் பார்கர்:** அரசியலமைப்பின் "ஒரு முக்கிய குறிப்பாக "முகவுரை உள்ளதாகக் கூறுகிறார். மேலும் இந்த முகவுரையால் ஈர்க்கப்பட்ட அவர் தமது 'சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகள், 1951' எனும் புகழ்பெற்ற புத்தகத்தின் தொடக்கத்தில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

**முகவுரை: அரசியலமைப்பின் பகுதி**

- ♣ 1960ல், பெருபரி யூனியன் வழக்கில் (Berubari Union Case) உச்ச நீதிமன்றம், முகவுரையை அரசியலமைப்பின் ஒரு அங்கம் இல்லை என்று அறிவித்தது. 1973ல் கேசவானந்தா பாரதி (Kesavananda Bharati Case)வழக்கு தீர்ப்பில் உச்சநீதிமன்றம் ஏற்கனவே அறிவித்த கருத்தை தள்ளுபடி செய்து, முகவுரை அரசியலமைப்பின் ஒரு அங்கம் என்று அறிவித்து உறுதி செய்தது.
- ♣ 1995 LIC இந்தியா வழக்கில் மீண்டும்,உச்சநீதிமன்றம் முகவுரை அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பகுதி என்று அறிவித்தது.

**குறிப்பிடத்தக்க குறிப்புகள்**

1. முகவுரை சட்டமன்றத்தின் அதிகார மூலம் இல்லை, சட்டமன்ற அதிகாரத்தை தடுக்கும் அதிகாரமும் முகவுரைக்கு இல்லை.
2. நீதிமன்றத்தில் முகவுரையை நடைமுறைப்படுத்த கோரி வழக்கு போட இயலாது.

**முகவுரையில் திருத்தங்கள்**

- 1973 கேசவானந்த பாரதி வழக்கில் சரத்து 368ன் கீழ் முகவுரை திருத்தம் பற்றி கேள்வி எழும்பியது.
- இவை முகவுரையை திருத்த முடியாது. இவை அரசியலமைப்பின் ஒரு அங்கம் இல்லை என வழியுறுத்தியது.
- மனுதாரர் (Petitioner) சரத்து 368ன் கீழ் சட்ட திருத்த அதிகாரத்தை பயன்படுத்தி அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பாக உள்ளதை சேதப்படுத்தவோ (அ) அழிக்கவோ பயன்படுத்த கூடாது என கூறினார். ஆனால் உச்சநீதிமன்றம் முகவுரையை அரசியலமைப்பின் அங்கமாக அறிவித்தது. எனவே முகப்புரையை திருத்த இயலும் என்று அறிவித்தது. ஆனால் சரத்து 368ஐப் பயன்படுத்தி முகப்புரையில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பை மாற்றியமைக்க இயலாது.
- முகவுரையில் 1976, 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தப்படி ஒரு முறை மூன்று வார்த்தை சேர்க்கப்பட்டன.

APOLLO STUDY CENTRE